# பட்டமேற்படிப்பு நிறுவனத்தில் அரவிந்தர் கருத்தரங்கம்

புதுச்சேரி, ஆக. 31: புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் அரவிந்தரின் பார்வை: மொழி, இலக்கியம் மற்றும் கலாச்சார பாரம்பரியம் சார்ந்த கண்ணோட்டங்கள் என்ற தலைப்பிலான கருத்தரங்கம் நடந்தது. இயக்குநர் சசிகாந்த டாஷ் வரவேற்றார். அரவிந்தர் சங்கத்தின் அரோபாரதி' அமைப்பின் உறுப்பினர் செயலர் கிஷோர் குமார் திரிபாதி கலந்து கொண்டு பழமையான அறிவை பாதுகாத்து டிஜிட்டல் மயமாக்குவதில் 'பாரம்பரிய அறிவு டிஜிட்டல் நூலகம்' மேற்கொண்டு வரும் தற்போதைய முயற்சிகளை விளக்கி கூறினார். கலாச்சார மறுமலர்ச்சிக்கான ஸ்ரீ அரவிந்தரின் கட்டமைப்பையும் அவர் சுட்டிக்காட்டினார்.



▶ புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் அரவிந்தரின் பார்வையில் மொழி, இலக்கியம் குறித்த கருத்தரங்கம் நடந்தது.

மகளிர் பொறியியல் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அதிகாரி சாய்ராம் சுந்தரம் கலந்து கொண்டு அரவிந்தரின் பூரண யோகம் குறித்து விரிவாக பேசினார். ஒடிசா அரசின் நிதித்துறையை சேர்ந்த அலகானந்தா திரிபாதி, மொழி மற்றும் ஒப்பீட்டு மொழியியல் குறித்த அரவிந்தரின் கருத்துக்களை எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியை பேராசிரியர்கள் பினோத், மேரி ஜோசபின் அருணா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

Dimakaran | 31/08/2026 | Page. NO-12